அரியாலை, யாழ்ப்பாணம்

# மணிமொழிக் கதைகளும் முத்துக்குவியலும்



முத்தகம் வெளியீடு
ஊரெழு, சுன்னாகம்.

தாரண வருஷம் வைகாசி மாதம் பதினெட்டாம் நாள்
2008

# உங்கள் முன்

இருபது ஆண்டுகளுக்கு (31.05.1984) முன் விடுதலை பெற்ற துணைவியாரின் ஆத்மா நினைவுபெற வேண்டி இச்சிறு நூலில் உள்ள சிந்தனைக்குரிய கதைகளையும், முத்துக்குவியலையும், பாடல்களையும் மூன்றாவது பதிப்பாகவும், விரிவாகவும் வெளியீடு செய்து. எமது தமிழ் மழலைகளுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

## வேண்டுகோள்:

ஆசிரியப் பெருந்தகைகளே, பாடசாலைப் பிள்ளைகளுக்கு இந்நூலில் உள்ளவற்றைத் தயவுசெய்து புரியவைக்கும்படி வேண்டுகின்றேன்.

- நன்றி -

"முத்தகம்"
ஊரெழு, சுன்னாகம்,
இலங்கை.
31.05.2004

இங்ஙனம்
அன்பன்
**திரு.சபா.வடிவேலு**

A. KUMARATHASAN
KALAIMAGAL ROAD
ARIYALAI WEST
JAFFNA

A. KUMARATHASAN
KALAIMAGAL ROAD
ARIYALAI WEST
JAFFNA

*திருத்திய இரண்டாம் பதிப்பு - 1987*
*திருத்திய மூன்றாம் பதிப்பு - 2004*
*திருத்திய நான்காம் பதிப்பு - 2008*

*தொகுப்பு*
**திரு.சபா.வடிவேலு**

*வெளியீடு:*
**முத்தகம், ஊரெழு, சுன்னாகம். (இலங்கை)**

*அச்சுப்பதிப்பு:*
முத்து பிறின்டேர்ஸ், 38-1, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

*03.10.2008*

உ

"பொற்றாலியோடெவையும்போம்"



# அமரர் திருமதி.மணியம்மா வடிவேலு

தோற்றம்
07.06.1936

மறைவு
31.05.1984

# அம்மா எங்கே?

அம்மா மெல்ல மெல்ல ஓடிவா
அறிவுச் செல்வம் சொல்லித்தா
சின்னச் சின்னச் செல்வங்கள்
சிரித்து மகிழச் சிறிதுவா.

அம்மா

பள்ளிக் கூடம் சென்றுவர
பாலும் பழமும் பரிந்துதா
கள்ளம் கபடம் அற்றுவர
கருணை வழி காட்டிவா

அம்மா

வீர உள்ளம் படைத்துவர
வீறு கொண்டு எழுந்துவா
உண்மை தன்னைப் பேசிடவே
உற்ற துணையாய் வந்திடுவாய்

அம்மா

துன்பங்கள் வந்த போதும்
துணிந்து வாழும் துணிவுதா
இன்பங்கள் வந்த போதும்
இசைந்து வாழும் பண்புதா

அம்மா

அகிலம் போற்றும் உன்தன்
அரும்பு மக்களை காணவா
ஆசையுடன் நாங்க ளுன்னை
அழைத் திடவே ஓடிவா

அம்மா

# நெஞ்சோடு நெஞ்சம்

அரியாலை, யாழ்ப்பாணம்

அன்பு அடக்கம் பொறுமை
அமைதி யார்க்கும் உடைமை
வன்பு கொடுமை கோபம்
வாழ்வு நெறியின் மடைமை

கல்வி கடமை ஒழுங்கு
காதல் அன்பு பணிவு
செல்வி அன்னை சேவை
சிற்நத வாழ்வின் போக்கு

ஆசை பாசம் மோசம்
அண்டி வந்தால் நாசம்
ஓசை ஒளியின் வடிவம்
ஒருவன் தந்த படிமம்

கருணை கண்யம் கணிசம்
காதல் வாழ்வின் ஊட்டம்
சீறுமை கயமை சீற்றம்
சிறந்த வாழ்வின் நாற்றம்

பெற்ற தாயைப் பேணு
பெரியார் வார்த்தை போற்று
கற்ற கல்வி எல்லாம்
கடுகு என்றே எண்ணு

\- ஆழ்கடலான் -

# பூரணமென்றுந் தீபற

எவ்வாறே பூரண மென்றுந் தீபற
எங்கெங்கும் பூரணமென்றுந் தீபற
வல்லான் வகுத்த தென்றுந் தீபற
வையகமும் வானகமும் பூரணமென்றுந் தீபற

பூரணத்தில் பூரணங் கண்டுந்தீபற
புவனி யெங்கும் பூரணமென்றுந் தீபற
அவனியெலாம் பூரணமென்றுந் தீபற
அகிலமுமே பூரணமென்றுந் தீபற

பூரணங் கண்டவரே பூரணரென்றுந் தீபற
ஆபரணங்கள் அறைவதுவும் பூரணமென்றுந் தீபற
காரணங்கள் தெரிந்தோமென் றுந்தீபற
வாரணத்தான் வகுத்த தென்றே றுந்தீபற

இயற்கை யெலாம் பூரணமென்றுந் தீபற
ஈசனருள் கருணையுமே பூரணமென்றுந் தீபற
மயக்கமற வாழ்வதுவே பூரணமென்றுந் தீபற
மாநிலத்தில் எல்லாம் பூரணமென்றுந் தீபற

எண்களிலே ஒன்பதுவே பூரணமென்றுந் தீபற
எண்ணரிய இறைவனுமே பூரணமென்றுந் தீபற
கண்ணுதலோன் காட்சியெல்லாம் பூரணமென்றுந் தீபற
காண்பரிய பேரொளியும் பூரணமென்றுந் தீபற

பூரணமாய் வாழ்வோ மென்றே உந்தீபற
பூரணனைக் காண்போ மென்றே உந்தீபற
பூரணத்தில் பூரணந்தான் வேண்டுமென்றுந் தீபற
பூமியிலே புரணனே பூரணமென்றுந் தீபற

- ஆழ்கடலான் -

## 1. தாயின் அன்பே அன்பு

சுப்பதேவ சோழமகாராசனின் மனைவி கமலவதியாள் ஒரு மகவை ஈன்றெடுக்கும் நேரத்தில் இன்னும் ஒரு நாழிகைக்குப்பின் இப்பிள்ளை பிறந்தால் மூன்று புவனங்களையும் ஆண்டு இவ்வுலகிலும், மறு உலகிலும் அழியாப் புகழுடன் வாழ்வான் எனச் சோதிடர்கள் சொல்லியபோது அதைக்கேட்ட கமலவதியார் தன்னை அவர்கள் சொன்ன நேரம் வரும்வரை தலைகீழாகக் கட்டும்படி வேண்ட அப்படியே அவர்கள் சொன்னநேரம் வரை தலைகீழாகக் கட்டி, பின் அவிழ்த்து விட்டதும், உடனடியாகக் கமலவதியார் ஓர் ஆண்மகவைப் பெற்றதும், மறு உலகம் சென்றுவிட்டார். தான் அழிந்தும் தன்பிள்ளை சிறந்து வாழ வேண்டுமென்பதில் தாயைவிட யார்தான் முன்னிற்பார்கள். அப்பிள்ளையின் கண்கள் எல்லாம் சிவந்து பிறந்தபடியால் அவனுக்குச் செங்கணான் என்னும் பெயர் வழங்கலாயிற்று.

## 2. மனச்சாட்சி

பல நூற்றாண்டுகட்கு முன்னர் நடந்த கதை, வாழ்க்கையிலே விரக்தி, வாழவோ முடியவில்லை. சமுதாயம் அப்பெண்ணுக்கு வாழ்வளிக்கத் தவறிவிட்ட நிலையில் அவள் என்ன செய்வாள். பாவம்! வயிறு வளர்க்க வழியே இல்லை. நிர்ப்பந்தமான நிலையிலவள் ஒழுக்கத்திலிருந்து தவறினாள். அவள் தவறினாளென்பதிலும் அவள் நிர்ப்பந்திக்கப்பட்டாள் என்பதே பொருந்தும். ஊரவரெல்லாம் குற்றவாளிப் பட்டம் சூட்டி அவளை யேசுநாதர் முன்னிலையில் நிறுத்தினர். அக் காலச் சட்டப்படி இப்படியானவர்களைக் கல்லெறிந்து கொல்லுவதுதான் முறை, எனவே ஒரே குரலில் எல்லாரும் அப்பெண்ணைத் தண்டிக்க வேண்டுமென்றார்கள். யேசுநாதர் சொன்னார். உங்கள் நெஞ்சைத்தொட்டு மனச்சாட்சியின்படி குற்றஞ் செய்யாதர் எவரோ

அவர்கள் எறியலாம் என்றார் ஒவ்வொருவரும் தம் நெஞ்சைத் தொட்டுப்பார்த்தனர் எவருமே எறிய முன் வரவில்லை. அவ்வளவுதான் மேரி மத்தலின் உலகவரலாறு உள்ளவரை உயிரோடு வாழும் பேறு பெற்றாள். தன் குற்றம் நீங்கி, பிறர் குற்றம் காண்பதே மேல்.

## 3. தாயின் அன்பைச் சொல்ல ஒரு சொல் இல்லை

அழகே வடிவானவள் அவள், அம்மங்கையிலே ஆராத காதல் இளைஞன் ஒருவனுக்கு. மனமொன்றிய காதலிலே ஒரு சோதனை.'. சோதனையா? அது காதலனுக்கே ஒரு சாதனை மேல் ஒரு சோதனை. காதலனைப் பார்த்து அக்கன்னி இப்படிச் சொன்னாள்: "உன்னுடைய தாயின் இருதயத்தைக் கொண்டுவந்து தந்தால்தான் கலியானம். அது நிறைவேறும் வரையிலே கல்யாணமே இல்லை" என்றாள் பொல்லாத கட்டளைதான். என்றாலும் பிள்ளைமனம் கல்லு அல்லவா. ஓடோடியும் சென்றானந்தக் காதலன். அன்னையின் நெஞ்சைப் பிளந்து அந்த அன்பே வடிவான இருதயத்தைக் கையிலேந்தியபடி காதலியிடம் விரைந்தான். அந்தோ, வழியிலே கல்லொன்று தடக்கி விழுந்தான். கைநழுவிய அன்னையின் இருதயம் அயலிலே கிடந்து இப்படிக் கேட்டது: "அருமை மகனே! ஏனிப்படி அவசரப்பட்டாய். ஆறுதலாக வந்திருந்தால் உன் காலில் கல் உறுத்தி இருக்காதே. அதோ இரத்தம் பாய்கிறதே. முதல் ஒரு துணி போட்டுக் கட்டு. பின் உன் காதலியிடம் செல். இறப்பிலும் - இப்படியான வாத்சல்ய உணர்வு. சிந்திப்பீர்கள் பிள்ளைகளே என்று சொல்லும் இக்கதை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தது.

## 4. அறிவு தந்த அவதானம்

ஒருவன் தனது ஒட்டகம் ஒன்றைக் காணாது காட்டு வழியே தோடிக்கொண்டு போகும்போது எதிரே வரும் ஒருவரிடம் "ஐயா இந்த வழியால் ஒரு ஒட்டகம் போனதைக் கண்டீரா" என்று கேட்க, அவர்

அதற்கு, "அந்த ஒட்டகம் ஒரு கர்ப்பவதியா?" "ஆம்" மேலும், "அந்த ஒட்டகத்திற்கு இடது கண் குருடா?" "ஆம் ஐயா" அத்துடன், பின்னங்கால் ஒன்று வளைந்துள்ளதா?" "ஆமாம்" மேலும், "அதன் முன்வாய்ப் பல்லுகள் சில உடைந்துள்ளதா!" எனக் கேட்டார் "ஆமாம், ஆமாம், எங்கே ஒட்டகம்? உடனே சொல்:லும்" என வினவ, "நான் காணவில்லையே" என்றார். பின் இருவரும் வாக்குவாதப் பட்டு நீதிபதிமுன் செல்ல, நீதிபதி இருவரையும் விசாரணை செய்தார். அப்போது எதிர்வழியால் வந்தவர் சொன்னார். "நீதிபதி அவர்களே, நான் வந்த வழியால் ஒரு ஒட்டகம் சென்றிருப்பதை அவதானித்தேன். அவ் ஒட்டகம் சிறிது தூரத்துக்கு ஒருமுறை படுத்திருந்து போனதை அறிந்து அது கெர்ப்பவதி என்றும், ஒரு கால் நிலத்தில் பதியாது இருந்ததால் ஒருகால் சொத்தி என்றும், ஒரு பக்கக் குழைகளைத் தின்றுகொண்டு போனபடியால் ஒரு கண் இல்லை என்றும், கடித்த இலைகள் எல்லாம் கிழிந்துள்ளபடியால் பல்லுகள் சில உடைந்துள்ளன எனவும் அறிந்தள்ளேன் எனச் சொன்னான். அவனின் அவதானச் செயலின் விவேகத்தை நீதிபதி மெச்சி அவனை வழி அனுப்பினார்.

## 5. வீரத்தாய்

மதுபோதையிலே தாயையும் மனைவியையும் அடித்து விட்டு மழைவழியே போகும் மகனை, குடையைப் பிடித்துக்கொண்டு போ, மகனே என்றாள் மற்றொரு தாய்,

வீட்டில் கன்னமிட்ட கள்வன் பசியுடன் இருக்கிறான் என அறிந்தவள், "உணவருந்திய பின் பொருள்களை எடுத்துக் கொண்டு போ" என்றாள் வேறு ஒரு தாய்

மண்டையில் கோடாரியால் வெட்டிய மகனைக் காட்டிக் கொடாது தான் விறகு கொத்தியபோது தவறிக் கொத்தி விட்டது என்று சொல்லும் தாயும் அவளே

யுத்தமுனையில் தன் மகன் புறமுதுகு காட்டி ஒடும் போது முதுகில் கத்திக்குத்து வேண்டி இறந்துள்ளான் என அறிந்து,

உண்மையை அறிய யுத்தகளம் போகும்போது எனது மகன் முதுகில் கத்திக்குத்து வேண்டி இருந்தால் அவனுக்கு நான் பால் ஊட்டிய முலையைத் திருகி எறிவேன் எனச் சபதமிட்டாள் ஒரு வீரத்தாய்.

இப்படியான தாய்மார்களின் அன்பில் ஆசைப்பட்டோ என்னவோ ஆண்டவனும், பலமுறை தாயாகிப் பாலூட்டினான் என்பது நீங்கள் அறியாத ஒன்றல்ல.

## 6. நேர்மைக்கு, கூலியா

தொழில் ஒன்றும் கிடையாது ஏழை ஒருவன் வேலை தேடிச் சென்றபோது ஒரு பழத் தோட்டத்திற் காவலாளியாகக் கடமைபுரிய இடம் கிடைத்தது. அவன் தனது கடமையில் கண்ணும்கருத்துமாக இருந்தான். ஒருநாள் அத்தோட்டத்தின் முதலாளி வந்து தனது தோட்டத்திலுள்ள நல்ல பழத்தில் இரண்டைப் பறித்து வரும்படி காவலாளியை வேண்டினான். அவனும் அப்படியே இரு பழங்களைப் பறித்து வந்து கொடுத்தான். அப்பழத்தை முதலாளி சுவைத்துப் பார்த்தபோது அவை புளிப்பாக இருந்ததால் காவலாளியிடம் நீர் இவ்வளவுகாலமும் இந்தத் தோட்டத்தில் இருந்தும் புளிப்பும் இனிப்பும் உள்ள பழங்களின் வித்தியாசம் தெரியாதா என்று வினவிய பொழுது காவலாளி தான் தங்களின் தோட்டத்தில் வேலை புரியவந்தேனே அன்றி பழங்களின் சுவையை அறியவல்ல என்று சொன்னதைக் கேட்ட முதலாளி அவன் நேர்மையில் சந்தோஷமடைந்து அவனுக்குக் கூலி உயர்த்திக்கொடுத்தான். ஆனால் காவலாளி ஐயா, நான் எனது கடமையைத்தான் செய்தேன் ஆனால் **நேர்மைக்காக நீங்கள் கூலியை உயர்த்தித்தர வேண்டாம்** என்று சொல்லி அத்தோட்டத்திலிருந்து வெளியேறிவிட்டான்.

## 7. கருணை

ஏழைக் குமாரன் ஒருவன் தன் வீட்டுப் பக்கத்தில் இருந்த தார்ப் பீப்பாவுக்குள் ஒரு சிறிய ஓணான் வீழ்ந்து ஓட முடியாது இருப்பதைக் கண்டு ஒருதடி கொண்டு வெளியே எடுத்தபோது அதன் கால்விரல் எல்லாம் தார் ஒட்டி இருந்தது. அதை நீக்குவதற்குத் தேவைப்பட்ட மண்ணெயை எடுத்து அதன் கால்களைக் கழுவி அதை ஓட விட்டுச் சந்தோஷமடைந்த நேரத்தில் தாயின் குரல் மூலம் இரவு விளக்குக் கொழுத்த மண்ணெய் இல்லையே என்று அறிந்துகொண்டான். அதனால் அன்:று இரவு முழவதும் இருபேரும் இருட்டில் இருந்து கருணையின் ஒளி தெரிவதைக் கண்டார்கள்.

## 8. நான் ஜனநாயகவாதி

டாக்டர் நோயாளியைப் பார்வையிடப் போகும்போது வைத்தியம் படிக்கும் மாணவர்களையும் கூட்டிக்கொண்டு போனார். அப்போது ஒரு நோயாளியைப் பரிசோதிக்கும்படி டாக்டர் சொல்ல அப்படியே மாணவர்களும் சோதித்து விட்டு அவருக்கு இப்போது கடுமையான நோய் ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் டாக்டர் அவருக்கு உடனடியாக ரண சிகிச்சை வைத்தியம் செய்ய வேண்டும் என்:று சொல்லியதைக் கேட்டுக்கொண்டிருந்த நோயாளி தன் படுக்கையைவிட்டு ஓடத் தொடங்கினான். அவனைப் பிடித்து ஏன் ஓடுகிறாய் என வினவ, அவன் நான் ஒரு ஜனநாயகவாதி, பலபேர் எமக்கு நோய் இல்லை என்று சொல்ல ஒருவருடைய சொல்லை நாம் ஏற்கமுடியாது என்றான்.

பலபேரிடமோ, ஒருவரிடமோ, சரியான, நீதியான, நியாய மானதைக் காண்பதே புத்திசாலியின் செயல்.

## 9. மனிதன்-னா

காட்டுவழியே ஒருவன் போகும்போது புலி ஒன்று அவனைத் துரத்தியது. அப்போ அவன் மரம் ஒன்றில் ஏறி மேலே போகும்போது அங்கு ஒரு கரடி இருப்பதைக் கண்டு பயந்துபோக, கரடியானது மனிதா நீ எனது வீடுதேடி வந்தவன் ஆனபடியால் உனக்கு நான் ஒரு தீங்கும் செய்ய மாட்டேன், எம்முடன் தங்கிப்போகலாம் என்றது. அதைக் கேட்ட மனிதன் கரடியுடன் தங்கினான். இரவானதும் கரடி அவனைத் தன் மடியிலே சிறிது நேரம் உறங்கும்படி சொல்லி அவனை நித்திரை கொள்ளச் செய்து அவன் விழித்தபின் அவனின் மடியில் உறங்கியது. இந்தச் சந்தரப்பத்தைப் பயன்படுத்தி கரடியை அவன் கீழே தள்ளி விட்டான். ஆனால் கரடியானது கீழே விழாது ஒரு கிளையைப் பற்றிக்கொண்டு அவனைப் பார்க்க அவன் கரடியிடம் மன்னிப்புக் கேட்டு மன்றாடினான். மனிதா, நீ எனது வீட்டிலிருக்கும் வரை உனக்கு ஒரு கெடுதியும் செய்யமாட்டேன். நாம் உனது இனமல்ல என்று சொல்ல அவன் வெட்கித் தலை குனிந்தான்.

## 10. சரியானதைச் செய்

அவனுடைய கடமைகளில் ஒன்று ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் பிற்பகல் கோவிலுக்குப் போய் வணங்கிய பின் படமாளிகை (தியேட்டர்)க்குப் போவதும் படம் பார்ப்பதுவும். அன்று புத்தம் புதிய படம் ஒன்று வந்தால் முன் கூட்டியே போனால்தான் டிக்கட் எடுக்கலாம். ஆனாலும் கோவிலில் பூசைபார்த்துப் போவதானால் படம் பாரக்க இயலாது. படம் பார்க்க வேண்டுமானால் பூசைபார்க்க இயலாது. இப்படி இருதலைக் கொள்ளி எறும்புபோல் ஆனான். இருந்தும் பூசை முடிந்த பின்னே படத்திற்குப் போவதெனத் தீர்மானித்து பூசை முடியும்வரை நின்று பின் படமாளிகைக்கு போனான் அங்கு டிக்கற் இல்லாது பலபேர்கள் வெளியில் நிற்பதையும் படம் தொடங்கியதையும் காண்கின்றான். இருந்தும் அவனின் ஆசைகாரணமாக வாயிலில் சிறிது நேரம் நிற்கின்றான் என்ன ஆச்சரியம் தியேட்டர் உள் இருந்து ஒரு கனவான் வெளியே

வருகிறார். அவனைப் பார்த்து தம்பி ஏன் நிற்கிறாய் என வினவ அவன் தன் நிலையை அவருக்கு விளக்கினான். உடனே தம்பி நான் அவசியம் வெளியில் போகவேண்டி இருப்பதால் நீர் எமது டிக்கற்றுடன் சென்று படத்தைப் பார்க்க விருப்பமா என்று கேட்டார். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் அவனின் எண்ணம் நிறைவேறியது.

பிள்ளைகளே தீர்மானிக்க வேண்டிய நேரத்தில் சரியானதைத் தீர்மானியுங்கள்

## 11. நிறைவேறா ஆசை

உலகில் ஆசைப்படாதவர்கள் யாரும் இல்லை. மனிதர்கள் விலங்குகள் மட்டுமல்ல, தேவுக்களும் ஆசைக்கு விதி விலக்கல்ல. ஒருமுறை சூரியபகவானுக்கு ஒரு ஆசை பிறந்தது. நான் எப்படியும் ஒருமுறையாவது இருள் என்பதைப் பார்க்க வேண்டுமென்று. ஆனால் சூரிய பகவான் தோன்றிய காலம் தொடங்கி இற்றைவரை அவரின் ஆசை நிறைவேறவில்லை, ஆகையால் நிறைவேறாத ஆசைகளை வளர்ப்பதை மறப்போமாக.

## 12. மரணம் நிச்சயம் மறவாதே

கிறீஸ்து நாதரிடம் ஒரு பாபி போய், சுவாமி நான் சுகமாக வாழ ஒரு வழி சொல்லவும் என்று அவர்களின் பாதத்தில் வீழ்ந்து வணங்கினான். அவர் பிள்ளாய், நீ இந்த வாரத்துக்குள் இறந்து போவாய். அதற்குள் நீ ஏதாவது தர்மம் செய் என்று சொன்னார்.

அதைக்கேட்ட அவன் நடுநடுங்கி உடனடியாகவே தனது பொருள்பண்டங்களை எல்லாம் விற்றுத் தர்மம் செய்தான். பின் தான் இறக்கும் வேளையை எதிர்பார்த்து இருந்தான். இருந்தும் தான் இறவாதிருப்பதை எண்ணி கிறீஸ்து நாதரிடம் போய் நான் இன்னும் இறக்கவில்லையே ஏன் என்று வினவினான்.

அவர் பிள்ளாய், நீ இந்த வாரத்தில் மட்டும் செய்த தர்மத்தால் தர்மதேவதை உன்னைக் காப்பாற்றியுள்ளது. ஒரு வாரத்தில் மட்டும் செய்த தர்மம் இவ்வளவு நன்மையைச் செய்யுமானால் உன் வாழ்நாள் முழுவதும் நீ தர்மம் செய்தால் அதன் பலாபலனை நீயே எண்ணிப்பார். என்று சொல்லி மரணத்தை மறவாதே என்றார்.

## 13. சமயோசித புத்தி

சனசஞ்சாலரமற்ற பயங்கரப் பாதையில் இரவு 12 மணியளவில் இளம் வாலிபர் ஒருவர். தன்னந் தனியே சைக்கிளிலே சென்றுகொண்டிருந்தார். அவருக்கு எதிர்ப்பக்கமாக ஒருவர் சைக்கிளைப் பறிக்கும் நோக்:குடன் ஒரு பொல்லாங் கட்டையுடன் வந்துகொண்டிருந்தார். தன்னைச் சாடுவதற்கே வருபவர் தயார் பண்ணுகிறார் என்பதைக் குறிப்பாலுணர்ந்தார் இளைஞர். செய்வதறியாதிருக்கும் வேளையில் ஒரு யோசனை தோன்றியது. உடனேயே சைக்கிளின் லைட்டை அணைத்ததும் கள்வனுக்கு ஒன்றும் தெரியாது திகைத்து நிற்கும் வேளையில் சைக்கிளில் வந்த இளைஞர் கள்வன் நின்ற இடத்தைத்தாண்டி வந்துவிட்டார். தப்பினேன் பிழைத்தேனென்று சமயோசித புத்தியால் அந்த வாலிபர் சுகமாக வீடுவந்தடைந்தார். எனவே சமயோசித புத்தியுடன் எந்த விஷயத்தையும் வெல்ல வேண்டும்.

## 14. மதத்தின் கொடுமை

பம்பாய் நகரில் இந்து முஸ்லீம் சமூகத்தில் இனக்கலவரம் நடந்த காலம். ஒருவன் இறக்கும் தறுவாயில் தண்ணீர் கேட்கிறான். வழியால் போன ஒரு இந்து நீ இந்துவா, முஸ்லீமா என்று கேட்கிறான். ஆனால் அவனுக்குத் தண்ணீர் கொடுப்போர் யாரும் கிடையாது உயிர் போகிறான். இதுதான் மதம் செய்யும் கொடுமை.

## 15. துணிவே துணை

பல ஆண்டுகளுக்குமுன் மலைநாடு சென்று சில வருடங்கள் வேலை செய்தபின் தனது ஊருக்குத் திரும்பும்போது தமது ஊதியப்பணத்துடன் காட்டுமார்க்கமாகப் பத்து மைல் நடந்து (பிரயாணவசதி இல்லாதபடியால்) வரும்போது இவன் பணத்துடன் போவதை அறிந்த மூன்று கள்வர்கள் இவனைத் தாக்கியும் கொலை செய்தும் பணத்தைப் பறிக்கும் எண்ணத்துடன் இவனை அணுகினார்கள். இதை அறிந்த இவன் மடிமீதிருந்த பணமுடிச்சை நிலத்தில் வைத்து விட்டு தனது உதவிக்காகக் கொண்டு சென்ற கம்பை உயர்த்திப் பிடித்தபடி (சீனடிசிலம்படி) விளையாட்டுத் தெரிந்தவர்போல் உங்களில் யாருக்காவது துணிவிருந்தால் அதோ பணப்பை அங்கே இருக்கிறது எடுத்துச் செல்லலாம் என்று ஒரு போராட்ட வீரன்பொல்தோன்றினான். இதைப் பார்த்த கள்வர்கள் பயந்து ஒருவர்பின் ஒருவராக ஓடி விட்டார்கள். அவர்கள் மறையும்வரை பார்த்துக்கொண்ட இவன் தப்பினேன் பிழைத்தேன் என ஓடிவந்துவிட்டான். பிள்ளைகளே அவனின் சமயோசித புத்தியும் துணிவுமே அவனைக் காப்பாற்றியது என்பதை அறியவும்.

## 16. உயர்ந்தவன்

பொற்கொல்லன் பட்டையில் அழகான தங்கவளையல் உருவாக இரும்புச் சுத்தியல் அடிப்பதில் ஈடுபட்டுக் கொண்டதைக் கண்ட தண்ணீர் சட்டியானது தங்கத்தைப் பார்த்து உன்னைவிட தரம் குறைந்த இரும்பு அடிக்கலாமா, நீ ஒரு நாளும் திருப்பி அடித்ததை நான் பார்த்ததில்லையே. தங்கம் ஒன்றும் பேசவில்லை, வழக்கம்போல் தன் புன்னகையை வீசி மௌனமாக இருந்தது. தாங்கிக் கொள்ளும் மனிதன்தான் உயர்ந்தவன்.

## 17. நிந்தித்தவனையும் நியாயமாக நடத்து

புத்த பகவான் நிர்வாண நிலையெய்திய காரணத்தால் நல்லவன், பொல்லாதவன் என்ற பேதமில்லாது யாவரையும் ஒரே தன்மைத்தாய் அன்பும் கருணையும் கொண்டு நடாத்தும் முறையினால் உலகத்துக்கு அவர் ஒரு உயர்ந்த உதாரண புருஷனாகத் திகழுகின்றார்.

தர்மத்தைப் போதனை செய்வதற்காக ஒரு கிராமத்துக்குச் சென்றார். அக்கிராமவாசிகளுள் ஒருவனுக்கு இவருடைய போதனையில் நாட்டமில்லாதிருந்தது. புத்த பகவானை அண்டிக் கேலி செய்து தூஷித்து விட்டான். புத்த பகவான் புன்சிரிப்புச் செய்து அவன்மீது இரக்கம் காட்டினார். தமக்கே உரிய சாந்த நிலையில் அவனைப் பார்த்து "சிநேகித, உனது தூஷணையும் ஏச்சும் கேலியும் என்னை ஒரு விதத்திலும் பாதிக்காது. உதாரணத்துக்கு நீர் ஒரு பழுத்த கனியை ஒருவருக்கு கொடுக்கின்றீர். அதனை உம்மிடம் இருந்து வாங்க மறுப்புத் தெரிவிக்கின்றார். அப்போது அப்பழம் எவரிடம் போகும்" என்று கேட்டார். ஓ இலேசான கேள்வி அப்பழம் என்னிடமே இருக்கும் என்றான் கிராமவாசி. புத்தபகவான் சிநேகிதர் என்னை வாயாரத் திட்டினீரே, வைதீரே அவைகளை நான் ஏற்கவில்லை" என்றார்.

கிராமவாசி உண்மை தெளிந்தான். புத்தபகவானின் புனித பாதமலரில் வீழ்ந்து மன்னிப்புக்கேட்டான். ஒருவரின் இதயத்தில் இரக்கம், பிழைபொறுத்தல், சாந்தம் முதலியன இருக்கின்றனவோ அவரிடம் இறைவன் உறைகின்றான்.

## 18. நல்ல வேடம் நல்லவனாக்கும்

ஒரு அரசனது வீட்டில் திருடன் ஒருவன் திருடச் சென்று மறைந்திருந்தபோது அரசனும் மனைவியும் "எமது மகளுக்கு ஆற்றங்கரையில் இருந்து தவஞ்செய்யும் முனிவர்களில்

ஒருவனுக்கே விவாகம் செய்துவைக்க வேண்டும் என்றும் நாளை ஆற்றங்கரைக்குப்போய் அவர்களின் விருப்பத்தை அறிந்து கொள்ளவேண்டும்" எனவும் பேசியதை அத்திருடன் கேட்டு தான் அரசியை மணக்கும் ஆசையில் தானும் ஒரு சன்னியாசி போல் வேடமணிந்து அவ் ஆற்றங்கரையில் இருந்துகொண்டான். மறுநாள் அரசனும் மனைவியாரும் வந்து அந்த ஆற்றங்கரையில் இருந்த முனிவர்கள் ஒவ்வொருவரிடமும் தமது மகளைத் திருமணம் செய்யும்படி கேட்க அவர்கள் மறுத்து விட்டார்கள். பின் கடைசியாக இரந்த முனிவராகிய திருடனிடமும் கேட்க அவன் மறுத்த விட்டான். அந்த வேடம் எவ்வளவு உயர்ந்தது என்பதை அவன் அறிந்து கொண்டதும் அன்று தொடக்கம் அவன் திருட்டுத் தொழிலை மறந்து சிறந்த ஒரு ஞானியாகத் திகழ்ந்தான்.

## 19. கடிக்காதே சீறு

காட்டுவழியே சென்ற முனிவர் ஒருவரை விஷப்பாம்பொன்று துரத்தியது அப்போது அவர் தம்மிடமுள்ள மந்திரசக்தியால் பாம்பை மயக்க வைத்து பாம்புக்கு நல்ல உபதேசம் கொடுத்து ஒருவரையும் தீண்டாது வாழ்ந்தால் நீ மோக்ஷம் அடையலாம் என்று சொல்ல பாம்பும் அவர் சொன்னபடி நடந்துவர அயலில் உள்ள பிள்ளைகள் கடிக்காத பாம்புதானே என்று பாம்பைக் கொல்ல எத்தனித்தார்கள். அவைகட்குப் பயந்து பாம்பு உணவு தேடவும் வெளியே வராது சாகும் தறுவாயை அடைந்து விட்டது. பிறிது ஒரு நாள் முனிவர் அவ்வழியால் சென்றபோது பாம்பைத் தேடிக் கண்டு பிடித்து ஏன் இப்படி மெலிந்துள்ளாய் என வினவ பாம்பு நான் இப்போது ஒரவரையும் கடிப்பதில்லையே என அறிந்து என்னை மக்கள் துன்புறுத்துகிறார்கள், அவர்கட்குப் பயந்து உணவு தேடாமல் இருந்தள்ளேன் என்று சொல்லியது. முனிவர் பாம்பே அவர்களைக் கடிக்க வேண்டாமென்றல்லவா சொன்னேன் சீறிப் பயமுறுத்த வேண்டாமென்று சொல்லவில்லையே என்:று சொன்னார். உன்னைப் பாதுகாத்துக்கொள். மற்றவருக்குத் துன்பம் செய்யாதே.

## 20. அறிவாளியை அறியும்

ஒரு மானைத் துரத்திக்கொண்டு காட்டுவழியே (வேட்டைக்குச் சென்றவர்கள்) தேடினார்கள் அவ்வழியே ஒரு சாது இருக்கக் கண்டு முதல் போனவர். ஏ கிழவா, இந்த வழியால் ஒரு மான் ஓடியதைக் கண்டாயா

என்று கேட்டார். இரண்டாவதாக வந்தவர் பெரியவரே இவ்வழியால் ஒருமான் சென்றதைக் கண்டீரா? என்று கேட்டார். மூன்றாவதாக வந்தவர் அந்தச் சாதுவை உற்று அவதானித்து அவர் ஓர் குருடன் என அறிந்து கொண்டார். மேலும் குரு மகாரிஷியே இந்த வழியால் ஏதாவது மிருகம் சென்ற கால் ஓசை கேட்டதா, தயவு செய்து சொல்ல முடியுமா என வினவினார். அப்போது அந்தப் பெரியவர் முன்பு ஒ சேவகனும், ஒரு மந்திரியும், என்னிடம் மான் ஒன்று போனதா எனக் கேட்டார்கள் அரசரே, என்று சொன்னதும் உண்மையான அரசனானவன் ஆச்சரியப்பட்டு எப்படித் தாங்கள் எங்களை அறிய முடிந்தது என்று கேட்க, என்னிடம் நீங்கள் வினவிய சொல்மூலம் அறிந்து கொண்டேன் என்றார். எப்படி அறிவின் தத்துவம்.

## 21. அறியும் அறிவு

பட்டினத்தடிகள் வயல் வரம்பில் தலைக்குக் கீழ் கையை வைத்தபடி படுத்திருந்தார். அவ்வழியால் கூலி வேலை செய்துவிட்டுப் போன பெண்களில் ஒருத்தி சொன்னாள் முற்றும் துறந்தவர். என்று சொல்கிறார்கள், தலைநோகாது கையைத் தலைக்கீழ் வைத்திருக்கிறாரே என்றாள் தான் இன்னும் தன் உடம்பின் சுகத்தை மறக்கவில்லையே என்று அடிகள் வருந்தித்தன் மானசீகக் குருவாக வரித்துக் கொண்டார். அறிவு எங்கு, எப்போது, எவரிடம் இருந்து வருவதென்று தெரியாது.

## 22. காய்ந்த மனம்

புத்தம் புதிய கல்லறை மேல் இருந்து கொண்டு ஒருத்தி விசிக்கிக் கொண்டிருந்தாள். அவளைப்பார்த்த வழிப்போக்கன் ஏன் விசுறுகிறாய் என்று வினவ, எனது கணவருக்கு, “உங்கள் கல்லறை காயுமுன் மீண்டும் திருமணம் செய்யமாட்டேன்” என்று வாக்குப்பண்ணி யுள்ளேன் அதனால் சீக்கிரம் காயப்பண்ணுகிறேன் என்றாள்.

## 23. கொள்ளிவாய்ப் பேய்

இணுவில் ஆஸ்பத்திரியில் அவனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்த மகிழ்ச்சியில் பக்கத்தில் உள்ள படமாளிகையில் படம் பார்த்துவிட்டு வெளியே வந்தபின்பே வீட்டின் நினைவு வந்தது

இணுவிலிலிருந்து வடக்கு நோக்கி இரண்டாவது சந்திப்பு சுன்னாகம். அங்கிருந்து கிழக்கு நோக்கினால் சிறிது தூரம் குடிமனை. அதைக் கடந்தால் சிறுவெளி, அங்கு் ஒரு பரந்த ஆலமரம். அவை அருகே மக்களின் உடல்களை ஒரு பிடி சாம்பலாக்கும் மயானம். இவைகளைத் தாண்டினால் தான் அவன் வீடு.

அம்மாவிடம் அப்பு சொன்ன சுடலையின் கொ...ள்...ளி... மிகுதியை அவனால் நினைக்க முடியவில்லை. நேரமோ இரவு ஒருமணி, வயதோ இளம் காளை, மனமோ சுடலை மரத்தடியில், முகமோ பனிபடர்ந்த இலைபோல், இருதயம் பெண்ட்டூலமாக, கைகால்கள் வீணைவாசிக்க அவன் கிழக்கு நோக்கி பைசிக்கிளின் காண்டிலைத் திருப்பி வந்துகொண்டிருக்கும் போது முன்னறிவித்தல் ஏதுமின்றி பைசிக்கிள் லையிட் மக்குப் பண்ணிவிட்டது. அன்று வானமே தெரியாத இருட்டொன்று தான் சொல்லவேண்டும். காலை நிலத்தில் ஊன்றியபடி கிழக்கே நோக்கினான் அவன் அங்கே கண்ட காட்சி அப்பு சொன்ன அந்த கொ..ள்...ளி.. வாய் அவனையும் அறியாது அலறியது.

திரும்பிப்போவதா. அல்லது தொடர்ந்து போவதா என்பதைச் சிந்தித்தபின் முன்னேறிப் போவதாக உறுதிசெய்து பெடலை உதைக்கிறான். அவனின் இதயம் அடிக்கும் ஒலியை விட வேறு ஒரு சத்தமும் அவனுக்குக் கேட்கவில்லை. சில்லுகள் இரண்டும் மெல்ல மெல்ல உருள, முன் தெரியும் வெளிச்சத்தின் ஒளிக் கதிர்களின் துணைகொண்டு முன்னேறுகிறான்.

மட்டுவில், மீசாலை கிராமங்களிலிருந்து வந்து மேற்கு ஊர்களுக்:கு கிடுகள் விற்றபின் பல மாட்டுவண்டிகள் மேல் கூடாரத்தில் ஒன்றும் அக்சுக்குத்தியில் ஒன்றுமாக இரு லாம்புவீதம் வைக்கப்பட்டிருப்பதை எல்லா வண்டியிலும் பல வெளிச்சங்களை அவன்

கண்டதும் வெள்ளிவாய்ப் பேயென நினைத்த தன்னை **இளித்தவாயன்** ஆக ஆக்கிக்கொண்டதையும் எண்ணி. எண்ணிச் சிரித்தபடி வீடுசென்றடைந்தான்.

பிள்ளைகளே எந்த விஷயமானாலும் முடிவு காணும்வரை தொடருங்கள். உண்மை தெரியும்.

## 24. *இயேசு சொன்ன கதை*

## விதைப்பு

ஓர் உழவன் விதைநெல்லோடு வயலுக்குள் இறங்கினான். முதலில் வலப்புறமும் பின்னர் இடப்புறமுமாக நெல்மணிகளை விசிறினான்.

சில மணிகள் கடினமான ஒற்றையடிப்பாதையில் விழுந்தன அவை முளைக்கவில்லை. பறவைகள் அவற்றைப் பொறுக்கின. கடவுள் தம்மோடு பேசியபோதும் அவருக்குச் செவி சாய்க்காதவர்களைப் போன்றவை அவை!

சில விதைகள் கற்பாறைகள் மீது விழுந்தன. முளைக்கவும் செய்தன. ஆனால் வேர் கொள்ளவில்லை, வெய்யிலில் சிறிய முளைகள் கருகிப்போயின. கடவுள் உரையைக் கேட்டும். விரைவில் அதை மறந்து விடுவோரைப் போன்றவை அவை!

சில மணிகள் முள்ளுப் பற்றைக்குள் விழுந்தன. அவை வளர்ந்து வரும்போது, முள்ளுச் செடிகளால் மூடுண்டு திணறிச் செத்தன. கடவுள் வாக்கைக் கேட்டு அதன்படி நடக்கச் சித்தம் கொண்ட சிலர், நாளடைவில் பொன், பொருள் இவற்றின் மீது கொண்ட ஆசையில் மயங்கி விடுகிறார்களே அவர்களைப் போன்றவை அவை!

ஆனால் பல விதைகள் பண்படுத்தப்பட்ட நல்ல மண்ணில் விழுந்தன. உயர வளர்ந்தன. கதிர்வந்து முற்றி மஞ்சள் நிறமாகிக் காற்றில் ஆடின. வயலை பார்த்தான் உழவன். விதைத்தவன் அவனேயாயினும் கடவுள் தந்த மழையும் வெய்யிலும் மண்ணுமே அச்செழிப்புக்கு காரணம் என்பதை அவன் உணர்ந்தான். இவ்விதைகள் கடவுள் ஆணையைக் கேட்டு அதன்படி நடக்கும் மக்களைப் போன்றவை.

**25.** இயேசுவின் வாழ்வில்

# விதவையின் காணிக்கை

கோயில் உண்டியலுக்குப் பக்கத்தில் இயேசு நின்றுகொண்டிருந்தார். பணக்காரரும், ஏழைகளும் ஆகப் பலர் வழிபட வந்தனர்; உண்டியலுள் பணமும் போட்டனர்.

இயேசு பெருமான் சீடர்களை நோக்கினார்:-

தேவனுடைய ஆலயத்துக்கு வருபவர்கள், அவன் பணிக்கெனப் பணம் தருகிறார்கள். பணம் படைத்தவர்கள் அதிக பணம் தருகிறார்கள். அப்படிப்பட்ட பலரை இன்று கண்டேன்.

இங்கே ஒரு பெண் வந்தாள். அவள் ஒரு விதவை. அவளுக்காக உழைக்கவோ, உதவவோ யாருமில்லை, அவள் ஆடையே அவள் ஏழ்மை நிலையைக் காட்டியது. உண்டியற் பக்கம் போன அவள் தன் பணப்பையைத் திறந்தாள். அவள் செல்வமெல்லாம் அதனுள் இருந்த இரண்டே இரண்டு சிறு நாணயங்கள் தாம். அவற்றை அவள் உண்டியலுள் இட்டாள்.

"எல்லோரையும் விட அவளே அதிகம் கொடுத்தவள் என்பது உங்களுக்குத் தெரியுமா"? என்று யேசு கேட்டார்.

"அதெப்படி? அவளிடம் இரண்டு சிறு நாணங்கள் மட்டுந் தானே இருந்தன?"

"உண்மைதான். பணம் படைத்தவர்கள் அதிகம் கொடுத்தார்கள்; ஆனால் அவர்களிடம் பெருந் தொகைப் பணம் மிகுதியாய் இருந்தது. கொடுத்ததனால் அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. ஆனால் இப் பெண்ணோ தன்னிடம் இருந்த அனைத்தையும் கொடுத்து விட்டாள். அவள் தியாகமே பெரிது!" என்றார் இயேசு.

## 26. யானையின் மணி ஓசை முன்

தாமரைத் தடாகத்துக்குள் இருந்த சிவபெருமானைக் கண்ட கிருஷ்ணபகவான் மைத்துன "மைத்துனரே, ஏன் சேற்றுக்குள் புதைந்து இருக்கிறீர்கள்" என்று கேட்க. "சத்தம் போடாதே சனியன் என்னைத் தேடுகிறான் அதுதான் மறைந்து இருக்கிறேன்" என்றார். கிருஷ்ணர் சிரித்துக் கொண்டு சனியன் பிடித்த படியால்தானே நீர் சேற்றுக்குள் போனீர் என்றார்.

## 27. கப்பலை இழுத்த குதிரை

முன்னைய காலத்தில் அரேபியர்கள் வியாபாரத்தில் கொடிகட்டிப் பறந்தார்கள். அவர்களின் அழகான குதிரைகளை உலகெங்கும் மானமாக விற்று அதிக பணம் சம்பாதித்து வந்தார்கள்.

ஒருமுறை குதிரைகளை அவர்கள் கப்பல்களில் ஏற்றிக் கொண்டு வெளிக்கிடும்போது முன்பு குதிரை வியாபாரம் செய்த பெரியார் (கிழவன்) ஒருவர் வந்து தம்பிமாரே, "நானும் உங்கள் கப்பலில் வருகிறேன். முன்னைய நினைவுகளை அசை போட்டுப்பார்க்க ஆசைப்படுகிறேன். என்னையும் அழைத்துப் போங்கள்" என அழாக்குறையாகக் கேட்டார். அதற்கு கப்பலில் இருந்த ஒருவன் "கண்கூடத்தெரியாத நீ எங்களுடன் வந்து என்ன செய்யமுடியும்" என்று சொல்லியபடி கப்பலில் கிழவனையும் ஏற்றிவிட்டான். கிழவரோ ஒரு மூலையில் இருந்து கொண்டார்.

கப்பல் பலநாள்கள் கடலில் பிரயாணம் செய்துகொண்டு டிருக்கும் வேளையில் திடீரெனக் கப்பல் ஓடமுடியாது இருப்பதை அறிந்த மாலுமிகள் செய்வதறியாது தடுமாறிக் கொண்டு பெரியவரிடம் சென்று "அப்பு எமது கப்பல் காரணம் இன்றி

இயங்காது இருப்பது தெரியவில்லையே" என்று சொல்லிக் கவலைப்பட்டார்கள்.

அப்போது அந்தப் பெரியவர், "உடனே கப்பலில் உள்ள குதிரை ஒன்றைச் சங்கிலியில் பிணைத்துக் கடலில் இறக்கி விடுங்கள், கப்பல் ஓடும்" என்றார். அவரின் சொற்படி குதிரையை கடலில் இறக்கிவிட்டு மறுமுனையை கப்பலில் கட்டி விட்டார்கள். ஆச்சரியம் சிறிது நேரத்தில் கப்பல் வேகமாக ஓடத்தொடங்கியது. பின்பு பெரியவரின் ஆலோசனைப்படி கட்டிய சங்கிலி வெட்டப் பட்டது. எப்படி இவ்வேலை நடைபெற்றது என அப்புவைச்சுற்றி எல்லோரும் கூடிவிட்டார்கள்.

பிள்ளைகளே, உங்கள் கப்பல் பனிக்கடலில் சிக்கிக் கொண்டது. திமிங்கிலமானது பனிக்கடலில் இரைதேடி வெளிக் கடலில்தான் உணவை உண்ணும். ஆகையால் அதன் உணவாகிய குதிரையை இழுத்துக்கொண்டு போனதினால் நாம் எல்லோரும் உயிர்பிழைத்தோம் என்றார். அப்புவின் அனுபவத்தை எண்ணி எண்ணி எல்லோரும் ஆனந்தப் பட்டார்கள். பிள்ளைகளே, அனுபவங்களைக் கேட்டு நடவுங்கள்.

# நிமிடக் கதைகள்

★ கொலை செய்தவனும் திருந்தி மீண்டும் கொலை செய்ய மாட்டான். ஆனால் ஒருமுறை துரோகம் செய்வதன் மீண்டும் துரோகம் இளைப்பான்.

★ பகவான் சாயிபாபா கடல் கரையில் நின்று உலாவும் போது ஒருவன் கேட்டான், "சுவாமி இந்தக் கடல் நீரை பெற்றோல் ஆக்கிவிட்டால் எல்லோரும் சுகமாகவாழலாம்" என்றான். சுவாமி, "அவர்கள் பெற்றோலாக்குவது சுகம் ஆனால் நீ குடித்த பீடியை கடலில் எறிந்துவிட்டால் பின் என்ன நிலை" என்றார்.

★ ஒரு குற்றத்திற்கு 1000/= தொடக்கம் 8000/= வரை குற்றம் வழங்கலாம் என்பது சட்டம். ஆனால் நீதிபதி தனது நிலையில் குற்றம் இல்லை என்று தீர்மானிக்க இறைவனாலும் முடியாது.

★ ஒருவன் சோதிடரிடம் சாதகம் ஒன்றைக் காட்டி பலன் கேட்க, சாதகன் "இன்றும் ஒரு வாரத்துள் இவர் இறந்து விடுவார்" என்று சொல்ல, ரூபா 500/= ஐக் கொடுக்க, ஏன் இவ்வளவு பணம் என்று கேட்க, "எனது தந்தை வேளைக்கு இறக்கப்போகிறார் என்ற மகிழ்ச்சியில் தந்தேன்" என்றான்.

★ "றோசாச் செடியே ஏன் வாடிஇருக்கிறாய்" என்று ஒருவன் கேட்க, "நான் நீர்ப் பைப்புக்கு கிட்டிய தூரத்தில் நிற்பதால் தான்" என்றது. பல பிள்ளைகளின் பெற்றோரின் நிலை இப்படித்தான்.

★ பக்கத்துவீட்டில் கோழி முட்டை திருடும் தன் மகனைத்திருத்த ஒரு வழியைக் கண்டுபிடித்துள்ளார்கள் தாய், தந்தையர். அது தான் பக்கத்து வீட்டுக்கோழியைப் பிடித்துக் கொன்றுவிடுவது. இப்படியான பெற்றோர்களும் இருக்கிறார்கள்.

# முத்துக்குவியல்

01. உன்னை முதலில் யோக்கியனாக்கிக் கொள், பிறகு ஒரு போக்கரி உலகில் குறைந்துள்ளார் என்பதில் சந்தேகமே இருக்காது.

02. ஒருவரின் உள்ளத்தை நீ அறியுமுன் உனது உள்ளத்தை அவர் அறிந்தது உனக்குத் தெரியாது.

03. மற்றவர்க்கு உதவி புரிவதையும் சிந்தித்தே செய்.

04. நேரில் கண்டு அனுபவித்த பின்னரே துவேஷத்தின் அற்பத்தனம் விளக்கமாகிறது.

05. சிலபேரிடம் நம்மை அறியாமலே அன்பு செலுத்துகின்றோம். அவர்களே நமக்கு உதவக்கூடியவர்கள்.

06. எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் ஒன்று தெரியும். அதுதான் ஒன்றும் தெரியாது.

07. செவிட்டுக் கணவனும் குருட்டு மனைவியும் சந்தோஷம் மிக்க தம்பதிகள் ஆவார்.

08. அன்பிற்கு விலைமதிப்பிட எண்ணுவதால்தான் அதன் ஆழத்தை அறியமுடியாத தவிக்கின்றார்கள்.

09. பேசாது இருந்தால் மூடனும் அறிவாளி என்று பிறரால் எண்ணப்படுகிறான்.

10. மறைவில் இருப்பதற்கு மரியாதை உண்டு.

11. ஒருபொழுதும் தவறு செய்யாதவன், ஒன்றுமே செய்யாதவன்.

12. நான் பேசுவது மற்றவர்க்குப் புரிந்துள்ளதா என எண்ணுமுன் தனக்குப் புரிந்துள்ளதா என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

13. சோதரியே! நீ ஒன்றையும் பொருள்படுத்தாதே; உன் புன்சிரிப்பு வாடக் கூடாது.

14. உண்மையை உனக்குச் சொல்லித்தரும் ஆசிரியன் உன் வீட்டுக்குள்ளே இருக்கிறான்.

15. அடக்கம் வேண்டும், ஆனால் அடிமைப்படக் கூடாது.

16. நமது புத்திசாலித்தனத்தை எப்படி மறைத்துக் கொள்வதென்பதே பெரிய புத்திசாலித்தனம்

17. மனச்சாட்சி ரப்பரைப் போன்றது. அதை வளைக்கலாம், ஆனால் ஒடிக்கமுடியாது.

18. காரணம் இல்லாது கோபம் வராது. ஆனால் அந்தக் காரணம் நியாயமாய் இருப்பதுதான் அபூர்வம்.

19. பாலை ஏன் பனைக்குக் கீழ் வைத்துக் குடிக்கக்கூடாது எனக் கேட்பவர் யாரோ அவரே ஒரு விவேகி.

20. நான் சொல்வதை அவள் விளங்காதவரை அவளிடம் குற்றம் காண நான் யார்?

21. ஜீவனைக் கடவுள், யாருடைய தேவைக்காகப் படைத்தார்? ஜீவனுக்காகவா, தனக்காகவா?

22. நான் இறக்கும் கடைசிவேளை வந்ததும். தனது எண்ணத்தைப் புரியவைக்க முடியவில்லையே என்ற கவலை தான் மிஞ்சும்.

23. சபலம் பிறக்கும்போது எவனுக்கு வைராக்கியம் பிறக்கின்றதோ அவனே ஞானியாவான்.

24. மாணிக்கக்கல் எல்லாம் மோதிரத்தில் ஏறுவதில்லையே.

25. பணம் இருந்தால் உங்களையே உங்களுக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் உங்களை ஒருவருக்கும் தெரியாது.

26. ஏழை கோழிக்கறி தின்றால் ஒன்றில் அவன் நோயாளியாய் இருப்பான். அல்லது கோழிக் நோய்க் கோழியாக இருக்கும்.

27. அறியக் கூடியதை, முன் அறிவதால், அறிவுக்கும் பயம் உண்டு.

28. எமக்குத் தண்டனைதான் விதித்தான் போகிறது, எம்மைக் குற்றவாளியு மென்றல்லவா கூறுகின்றார்.. இதுதான் வேதனைக்குள் வேதனை.

29. கடவுளை நம்பினால் மட்டும் போதாது, கடவுளும் எம்மை நம்ப வேண்டுமல்லவா.

30. நியாயம் இருபக்கங்களிலும் உண்டு. ஆனால் நீதி ஒரு பக்கம்தான் உண்டு.

31. வரலாம் என நினைக்கும் துன்பங்களை நினைவில் நிறுத்திக் கொண்டால் எல்லாத் துன்பங்களையும் வெற்றி கொள்ளலாம்.

32. நாஸ்திகன் நம்பிக்கை அற்றவன். ஆனால் நம்பிக்கை அற்றதில் நம்பிக்கை உள்ளவன்.

33. அன்புவை, ஆசையுடன் உழை, அழகாகஇரு, திறமையாகச் செய், நீதியாக நட, கூர்மையுடன் விழித்திரு, ஆனால் உன் அழிவை மறந்தும் மறவாதிரு.

34. தெரிந்திரு, தெரியுமென்று இருக்காதே.

35. ஒருமுறை சாப்பிடுபவனே உணவு கிடைக்காதவனைப் பற்றி நினைக்கின்றான்.

36. சிறப்புடன் வாழின் சிரிக்கப் பழகு.

37. மருத்துவமனைக்குப் போனால் நோய் தீரும். மருந்தினால் அல்ல. அதிக நோய் உள்ளவரைப் பார்வையிடுவதால்.

38. மறதியின் உதவியால்தான் நாம் திரும்பவும் வாழப் பழகிக் கொள்கிறொம்.

39. கடமை செய்யும் காலம் கிடைத்து விட்டதே என நீ எண்ணும் போதே உதவி பெறுபவரின் காலம் கடந்து விடும்.

40. சந்தோஷத்தின் விரோதி சந்தேகம்.

41. சிந்தியபாலை எண்ணிச் சிந்தியாதே .

42. எண்களில் ஆகப் பெரிய எண் இதுதான் என்று சொல்ல முடியாதது போலவே இருந்தும் இல்லாதிருப்பார் இறைவன்.

43. அழகு ஒரு ஆபத்தான ஆயுதம்.

44. ஒவ்வொன்றையும் நினை, ஆனால் அந்த ஒன்றாகிவிடாதே.

45. அறியாமை அவ்வளவு இழிவு அன்று, அறிய மனம் இல்லாமைதான் இழிவு

46. நம்பிக்கை உள்ள இடத்தில் விளக்கத்திற்கு அவசியமே இல்லை

47. சுற்றத்தைப் பார்த்து சுகத்தை அனுபவி

48. காதலின் முதல் பெருமூச்சு அறிவின் கடைப் பெருமூச்சு

50. நீ கொதிநீர் ஆகினாலும் நெருப்பாக ஆகிவிடாதே

51. சகோதரம் என்பது ஒருதாய் வயிற்றில்தான் பிறப்பதல்ல

52. மனைவி பேசுவதற்கு விஷயமே வேண்டியதில்லை

53. ஒளி முடிந்து இருள் தொடங்கும் இடைவெளியே மனித வாழ்க்கையின் நேரம்

54. கடவுள் இப்போ என்ன செய்கிறார். என்று எனக்குத் தெரியும். ஆனால் உனக்குச் சொல்ல எனக்குத் தெரியாது.

55. நீதியை மனிதன் நடத்தினால் ஒரு நாளைக்கு நீதி மனிதனை நடத்தும்

56. செல்வத்தை மதியாதே என்று சொல்வதற்குச் செல்வம் வேண்டும்.

57. மாற்றங்களை மனம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

58. அழகினால் ஆசை பிறக்கின்றது, ஆசையினால் அன்பு பிறக்கின்றது, அன்பினால் கருணை பிறக்கின்றது, கருணையினால் அருள் சுரக்கின்றது.

59. இது இதுவேதான் கடவுள் என்று காட்டுவது தான் புறசமயங்கள், இது அல்ல, இவை அல்ல கடவுள் என்று கூறுவது இந்து சமயம்.

60. பேராறு ஓடுகின்றதுதான் ஆனாலும் தாகத்திற்கு நீர் பருக முடியாது. மறித்துக் கட்டிய மடையில் தான் நீர் அருந்தலாம்? அதே போல் வேதாந்தம் என்ற ஆற்றில் கட்டிய மடைதான் சைவ சித்தாந்தம்

61. நன்றி மறப்பது நன்று, நீ செய்த நன்றியை.

62. பொய்யை மறவாதே, மறந்தாயானால் மெய் பேசமாட்டாய்.

63. நான் ஒன்றிலும் நம்பிக்கை வைக்கமாட்டேன். நீ நம்பிக்கை இல்லை என்பதில் நம்பிக்கை வைக்கிறாய்தானே.

64. எனக்கு அதிக விஷயங்கள் தெரியும், ஆனால் உனக்கு சொல்ல ஒன்றும் தெரியவில்லை.

65. ஆடம்பரம் இல்லாதது போல் நீ வாழுவதும் ஓர் ஆடம்பரமே.

66. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது. பசிக்காது விட்டாலும் புல்லைத் தின்னாது.

67. நீ கல்வி என்னும் குதிரையை ஓட்டுகிறாய். பின் குதிரைக்காக ஓடுகிறாய்.

68. நான் செய்த குற்றம் தண்ணீர்க் குளத்திற்கு தொட்டிக்கருகே நின்றது. ஆகையால் நான் வாடி வதங்கி கருகி நிற்கின்றேன்.

- பூமரம் -

69. நான் போகவேண்டிய இடத்திற்குப் போய் விட்டால் ஆகா முத்தம் கூடக் கிடைக்கும் ஆனால் அடுத்த நிமிடம் குப்பைத் தொட்டியில். - தபால் கவர் -

70. தட்டிக் கொடுத்து எரியப்பண்ணிய என்னையும் அல்லவா நெருப்பில் எரியப் போட்டு விட்டான். - தடிக்கம்பு -

71. என் துணையுடன் மேலே ஏறியவன் என்னைத் தள்ளி விடுவான் என்று நான் முன்னமே தெரிந்து கொண்டேன் - ஏணி -

72. சந்தர்ப்பம் உன்னைப் பெரியவனாக்கியது அல்லாமல் நீ பெரியவனல்ல. அதை மறந்து விடாதே. ஆகையால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்து.

73. கஷ்டங்களை முன் கூட்டியே கற்பனை செய்தாயானால் நீ தற்கொலை பற்றி எண்ணமாட்டாய்.

74. உன்னை நீ எப்படி மறைத்தாலும் உன் சுயரூபம் எல்லோருக்கும் எப்பவோ தெரியும்.

75. யாரும் யாருக்காகவும் அழுவதில்லை. அனைவரும் தனக்காகத் தான் அழுகின்றார்கள். ஆனாலும் அது அவர்கட்கே புரியாது.

76. சாகப் போகிறவனுக்கு என்ன கவலை தெரியுமா? அறிய வேண்டியதை அறியாமலும் அறிந்தவற்றைச் சொல்லி முடிக்காமலும் இறக்கப் போகின்றேன் என்பதே.

77. நீயும் ஒரு தந்தையான பின்னே தந்தையைப் பற்றி அறிய முடியும்.

78. இது நல்ல அழகுதான். ஆம், ஆனால் அது எங்கே இருக்கிறது என்று சொல்ல முடியவில்லையே. அதுதான் அழகின் நிலை.

79. நியாயம் இரு பக்கங்களிலும் இருக்கும். ஆனால் நீதி ஒருபக்கம் தான் உண்டு.

80. அமைப்பித்தவனை நினைவுகூரும் மக்கள் அமைத்தவனை மறந்தும் நினைக்க மாட்டார்கள்.

81. மகிழ்ச்சியாக இருப்பவன், மகிழ்விப்பவன். மறந்திருப்பவன், மனமொத்து இருப்பவன். மரணத்தை எதிர்பார்த்திருப்பவன் இவனேதான் மனிதன்.

82. என்மீது அவள் சந்தேகப்படாது விட்டால் அன்பு இல்லாதவள் என்று தானே அர்த்தம்.

83. நான் போகின்றேன் என்பது உண்மை. ஆனால் எங்கே என்பது தான் தெரியவில்லை.

84. அவன் தொழில் பிச்சை எடுப்பதே அல்லாது அவன் பிச்சைக்காரன் அல்ல.

85. கடமையைச் செய், பலனை எதிர்பாராதே என்பதற்கிணங்க நடப்பவன் தான் - அலுக்கோசு

86. உன்னைப் பற்றி நான் அறிய முன்னே நீ என்னைப் பற்றி அறிந்தது எனக்குக் கவலை

87. அவரோ பென்னம் பெரிய அறிவாளி, பேரரசன், ஞானக் கடல், உண்மைக்கு அரிச்சந்திரன், கொடைக்குக் கர்ணன், வீரத்திற்கு அர்ச்சுனன், நீதிக்குத் தர்மன், பொறுமைக்கு இ ஈ ஈ ய்.

88. தியானம் தெரியாததைத் தேடுவது, மரணம் தெரிந்தது உண்மை, தெரிந்ததை மறவாது இருந்தால் தெரியாதது தெரியும்.

89. தாய் அன்பு என்பது பெற்ற தாயில்தான் இருந்து வருவது அல்ல தாய் அன்பு எங்கிருந்தும் எந்தவேளையிலும் எவரிடமும் இருந்துவரும் ஆகவே மிக உயர்ந்த அன்புக்குப் பெயர்தான் தாய் அன்பு.

90. நாம் போகும் பாதை முடிவில்லாத பாதை, அதை அறியாது மைல் கல் வைக்கிறோம்.

91. தம்பி உந்தக் கொப்பில் காய் இல்லை என்று தறிக்கிறாய் ஆனால் காய்கள் இல்லாத கொப்பு இருந்தால் தான் மற்றக் கொப்பு காய்க்கும்.

92. உண்மைக்கு வழித்துணை தேவை இல்லை பொய்மைக் குத்தான் வழித்துணை தேவை.

93. நீ நீதியாக நடக்கலாம் ஆனால் மற்றவருக்கும் அது நீதிதான் என்பதைத் தெரியப்படுத்து

94. நியாயம் இருபக்கமும் உண்டு நீதி ஒருபக்கம் தான் உண்டு.

95. ஒழுங்கைக் கடைப்பிடிக்கின்றான் ஐரோப்பியன் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்றான் ஆசியன்.

96. எங்கிருந்துவந்தேன் என ஆராய்கிறான் இந்தியன் எங்கே போகிறேன் என ஆராய்கிறான் ஐரோப்பியன்.

98. அன்பிற்காக மாய்கிறான் இந்தியன் அன்பை மாய்க்கின்றான் ஐரோப்பியன்.

99. நான் எரிந்து கொண்டு இருப்பதால் தான் என்னைக்காட்டி நீ முன்னேறுகிறாய்.

100. பணிவு என்பது ஒரு பண்பு தானே தவிர அடிமைச் சின்னத்தின் அடையாளமல்ல

101. முத்துக்கள் எல்லாம் கடலின் அடித்தளத்தில் இருக்க நுரைதானே தலைமை தாங்குகின்றது.

102. யானைக்கு அதன் தும்பிக்கைதான் பலம் அதனால்தான் பலவீனத்தையும் தேடிக்கொள்கிறது.

103. நான் தலைவிதியை நம்புகின்றேன். ஆனால் அதை மாற்ற முடியாது என்பதை நான் நம்பவில்லை.

104. புலன்கள் படைப்பை அறிவதற்காக உருவாக்கப்பட்டவையே அல்லாது படைத்தவனை அறிவதற்கல்ல.

105. சாவதை உன்னால் தடுக்க முடியாது. ஆனால் மென்மையாகச் சாக முடியும்.

106. இளமையில் தவறான பலவற்றை நம்புகிறோம் முதுமையில் உண்மையான பலவற்றைச் சந்திக்கின்றோம்.

107. அணில்கள் எல்லாம் பாலம் கட்டினாலும் அதில் நடந்துபோகிறவர்கள் சில ராமர்கள்தான்.

108. நிலையாமைதான் தத்துவமெனில் நிலையாமை நினைப்பதும் ஓர் இறந்துவிடாத தத்துவமே.

109. துரோகச் செயலை மன்னித்துவிடு, துரோகம் செய்தவனை மறவாதே

அன்பளிப்பு:

# வேலழகன் தொழிற்சாலை

சுன்னாகம்.

முத்து பிறின்டேர்ஸ், சுன்னாகம்.